செ.வெ.எண் 387/ 2021 நாள் - 11.09.2021

# திருப்பத்தூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் மாபெரும் கொரோனா தடுப்பூசி முகாம் முன்னேற்பாடு பணிகள் குறித்து மாபெரும் கொரோனா தடுப்பூசி முகாம் கண்காணிப்பு அலுவலரும் மீன்வளத்துறை கூடுதல் ஆணையருமான திரு.சஜ்யன்சிங் ஆர்.சவான்.இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.அமர்குஷ்வாஹா.இ.ஆ.ப., அவர்கள் முன்னிலையில் அனைத்துத்துறை அலுவலர்களுடன் ஆய்வுக்கூட்டம் நடைப்பெற்றது.

திருப்பத்தூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் மாபெரும் கொரோனா தடுப்பூசி முகாம் முன்னேற்பாடு பணிகள் குறித்து மாபெரும் கொரோனா தடுப்பூசி முகாம் கண்காணிப்பு அலுவலரும் மீன்வளத்துறை கூடுதல் ஆணையருமான திரு.சஜ்யன்சிங் ஆர்.சவான்.இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.அமர்குஷ்வாஹா.இ.ஆ.ப., அவர்கள் முன்னிலையில் அனைத்துத்துறை அலுவலர்களுடன் ஆய்வுக்கூட்டம் நடைப்பெற்றது.

இக்கூட்டத்தில் மாபெரும் கொரோனா தடுப்பூசி முகாம் கண்காணிப்பு அலுவலரும் மீன்வளத்துறை கூடுதல் ஆணையருமான திரு.சஜ்யன்சிங் ஆர்.சவான்.இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்ததாவது:-

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க தமிழகத்தில் உள்ள பொது மக்கள் அனைவரும் கொரோனா தொற்றிலிருந்து பாதுகாத்திட கொரோனா தடுப்பூசி செலுத்தும் நடவடிக்கைகளை தீவிரப்படுத்தி வருகின்றார்கள். அதனடிப்படையில் நாளை 12.09.2021 ஞாயிற்றுக்கிழமை தமிழ்நாடு முழுவதும் மாபெரும் கொரோனா தடுப்பூசி முகாம் நடைபெறவுள்ளது. மேலும் திருப்பத்தூர் மாவட்டத்தில் 70 ஆயிரம் நபர்களுக்கு கொரோனா தடுப்பூசி செலுத்த இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. இதற்கான முன்னேற்பாடு பணிகள் நடைபெற்று வருகிறது.

திருப்பத்தூர் மாவட்டத்தில் உள்ள 18 முதல் 44 வயதுள்ள நபர்கள் 5 இலட்சத்து 66 ஆயிரத்து 216 நபர்களும், 45 வயதிற்கு மேற்பட்டவர்கள் 3 இலட்சத்து 44 ஆயிரத்து 83 நபர்களும் என மொத்தம் 9 இலட்சத்து 10 ஆயிரத்து 299 நபர்களுக்கு கொரோனா தடுப்பூசி செலுத்த இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. நமது மாவட்டத்தில் பொது மக்கள் கொரோனா தடுப்பூசி இன்றைய நாள் 3,53,990 நபர்களுக்கு முதல் தவணை தடுப்பூசியும், 79,479 நபர்களுக்கு இரண்டாம் தவணை தடுப்பூசி என மொத்தம் 4 இலட்சத்து 33 ஆயிரத்து 469 நபர்களுக்கு முதல் மற்றும் இரண்டாம் தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ளது.

திருப்பத்தூர் மாவட்டத்தில் திருப்பத்தூர் வட்டாரத்தில் 70 தடுப்பூசி முகாம், ஆலங்காயம் வட்டாரத்தில் 64 தடுப்பூசி முகாம், மாதனூர் வட்டாரத்தில் 68 தடுப்பூசி முகாம், ஜோலார்பேட்டை வட்டாரத்தில் 71 தடுப்பூசி முகாம், கந்திலி வட்டாரத்தில் 66 தடுப்பூசி முகாம், நாட்றம்பள்ளி வட்டாரத்தில் 48 தடுப்பூசி முகாம் என மொத்தம் 387 கொரோனா தடுப்பூசி முகாம் நடைபெறவுள்ளது. திருப்பத்தூர் நகராட்சியில் 32 இடங்கள், வாணியம்பாடி நகராட்சியில் 30 இடங்கள் ஆம்பூர் நகராட்சியில் 26 இடங்கள், ஜோலார்பேட்டை நகராட்சயில் 10 இடங்கள் என மொத்தம் 98 கொரோனா தடுப்பூசி முகாம்கள் நடைபெறவுள்ளது. இந்த மாபெரும் கொரோனா தடுப்பூசி முகாம்களை அனைத்து

பொது மக்களும் பயன்படுத்தி கொண்டு கொரோனா தடுப்பூசி செலுத்திக்கொள்ளுமாறு அறிவுறுத்தப்படுகிறது. இம்மாவட்டத்தில் உள்ள பொது மக்கள் 100 சதவிகிதம் கொரோனா தடுப்பூசி செலுத்திக்கொள்ள வேண்டும்.

இம்முகாம்கள் நடைபெறும் இடங்களில் தேவையான அடிப்படைவசதிகளை பொதுமக்களுக்கு செய்துகொடுக்க வேண்டும். தேவையான மருந்து மற்றும் தடுப்பு ஊசிகளை போதியஅளவில் கையிருப்பில் வைத்துக் கொள்ளவேண்டும். ஒவ்வொரு இடத்திலும் இலக்கை தாண்டி தடுப்பூசி செலுத்துவதை அலுவலர்கள் உறுதிசெய்ய வேண்டும். கொரோனா முதல் தவணை தடுப்பூசி மற்றும் இரண்டாம் தவணை தடுப்பூசி செலுத்திக்கொள்வதால் மட்டுமே முழுமையாக நோய் தொற்றிலிருந்து பாதுகாப்புகிடைக்கும் என்பது பொதுமக்களுக்கு மீண்டும் மீண்டும் தெரிவிக்கவேண்டும். தொடர்ந்து தடுப்பூசி கையிருப்பு குறித்தும் தடுப்பூசி முகாம்களுக்கு கொண்டு செல்வது குறித்தும் அதற்கு தேவைப்படும் வாகனங்கள் பணியாட்கள் செவிலியர்கள் பொது மக்களை முகாமுக்கு அழைத்துவர செய்யப்பட்டுள்ள ஏற்பாடுகள் குறித்து துறைவாரியாக கொரோனா தடுப்பூசி முகாம் கண்காணிப்பு அலுவலர் கேட்டறிந்தார்கள்.

மேலும் இம்மாவட்டத்தில் பொது மக்கள் அதிகமாக கூடாமல் தடுக்க காவல்துறையுடன் ஒருங்கிணைந்து முகாமை நடத்தப்பட வேண்டும். இம்முகாமில் பொது மக்கள் ஆதார் எண் மற்றும் கைபேசி எண் பதிவுசெய்ய ஒன்று அல்லது இரண்டு நிமிடங்கள் ஆகும் அதுவரை மக்களை இருக்கையில் அமரவைக்க வேண்டும். அரசு அலுவலர்கள் அனைவரும் மலைவாழ் மக்கள் மற்றும் பொது மக்களுக்கு தடுப்பூசி செலுத்திகொள்வதின் அவசியத்தையும் அதன் பயன்பாட்டையும் எடுத்து கூறி அவர்களை தடுப்பூசி செலுத்திகொள்ளுமாறு அறிவுறை வழங்க வேண்டும். வாக்காளர்கள் பட்டியலை பயன்படுத்தி நிர்ணயம்செய்யப்பட்டுள்ள கொரோனா தடுப்புசி இலக்கினை முடிக்கப்பட வேண்டும். ஆகவே அனைத்துதுறை அலுவலர்கள் இப்பணியில் ஒருங்கிணைந்து செயல்பட்டு இலக்கை தாண்டி தடுப்பூசி செலுத்தி முகாம் வெற்றியடைய அனைத்து துறை அலுவலர்கள் பணியாற்ற வேண்டும் என மாபெரும் கொரோனா தடுப்பூசி முகாம் கண்காணிப்பு அலுவலர் அவர்கள் கேட்டுக்கொண்டார்கள்.

இந்த ஆய்வுக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் திரு.என்சிஈ.தங்கையாபாண்டியன், திருப்பத்தூர் சார் ஆட்சியர் மரு.பி.அலர்மேல்மங்கை.இ.ஆ.ப., மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குனர் திரு.செல்வராசு, மகளிர் திட்ட இயக்குநர் திருமதி.உமாமகேஸ்வரி, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்(பொது) (பொறுப்பு) திரு.விஜயன், வருவாய் கோட்டாட்சியர் திருமதி.காயத்திரி சுப்பிரமணியன், துணை இயக்குநர் சுகாதாரப்பணிகள் திரு.செந்தில், துணை ஆட்சியர்கள் மற்றும் அலுவலர்கள் கலந்துக்கொண்டனர்.

**வெளியீடு - செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம். திருப்பத்தூர் மாவட்டம்.**